**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 133 of 2021

Depositions of DW - 1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : வடிவேல்

Father's Name : த/பெ. சுப்ரமணியம்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of June 2023.

**முதல் விசாரணை –**

1. நான் இந்த வழக்கில் எதிரி ஆவேன். நான் கடந்த 20 வருடங்களாக டிரான்ஸ் போர்ட் தொழில் மற்றும் தறி வைத்து ஓட்டி வருகிறேன். மனுதாரரான பொன்னமாளை எனக்கு யார் என்று தெரியாது. ஆனால் இவ்வழக்கில் ஆஜர் ஆகி வரும் நடராஜ் என்பவரை எனக்கு தெரியும். நடராஜ் முதலில் டெக்ஸ்டைல்ஸ் தொழிலில் இருந்ததால் அவரை எனக்கு 20 வருடங்களாக தெரியும்.

2. அதற்கு பின்னர் தான் நடராஜ் பல்லடம் சிட்ஸ் பண்டில் வேலைக்கு வந்தார். 2010 லிருந்து பல்லடம் சிட்பண்டில் வேலை பார்க்கிறார். நானும் என்னுடைய நண்பர் ராஜேஷ் என்பவரும் 2012 ம் வருடம் பல்லடம் சிட்பண்டில் ரூ.5 லட்சத்திற்கான 20 மாத சீட்டில சேர்ந்தோம். 2012 ம் வருடம் 2 வது மாதம் சீட்டில் சேர்ந்தோம். 5 வது மாதம் ரூ.1,75,000/- தள்ளுபடி போக மீதி தொகையை ஏலத்தில் எடுத்தேன்.

3. அவ்வாறு ஏலத்தில் சீட்டு பணம் எடுத்தபோது பொறுப்பிற்காக வெற்று கடனுறுதி சீட்டில் கையொப்பம் மட்டும் செய்து மற்றும் சிட்டி யூனியன் வங்கி காசோலை எண்.204 யையும் கொடுத்தேன். சீட்டு பணம் எடுக்கும் அனைவரிடமும் கடனுறுதி சீட்டு மற்றும் காசோலையை கேட்பார்கள். நான் என்னுடைய தொழிலுக்காக சிட்டி யூனியன் வங்கியில் ரூ.20 லட்சத்தினை கடன் பெற்றிருந்தேன். 2012 ம் வருடம் 9 வது மாதம் என்னுடைய தொழில் நலிவடைந்து விட்டது. அதனால் என்னுடைய வங்கி கணக்கினை முடிவுக்கு கொண்டுவந்து வாராக்கடனாக அறிவித்துவிட்டார்கள். அவ்வாறு கணக்கை முடித்த பொழுது என்வசம் இருந்த காசோலை புத்தகத்தினை நான் திரும்ப வங்கியில் ஒப்படைத்து விட்டேன்

4. நான் மேற்படி பல்லடம் சிட் பண்டில் போட்ட 5 லட்சத்திற்கான சீட்டினை 2015 ம் வருடம் தான் முழுவதுமாக கட்டி முடித்தேன். அந்த சமயத்தில் பல்லடம் சிட் பண்டின் உரிமையாளரான ஈஸ்வர மூர்த்தி மற்றும் பணம் வசூலிக்கும் நடராஜ் ஆகியோர் வாரம் இருமுறை என்னுடைய வீட்டிற்கு வந்து தவணை தொகையை உரிய காலத்தில் செலுத்தாதற்கு கூட்டு வட்டி போட்டு தான் பெறுவோம் என்றும் அதனால் நான் கூடுதலாக ரூ.1,70,000/- தரவேண்டும் என்று கூறுவார்கள். எனக்கு பணம் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இல்லாததால் நான் அவர்கள் கேட்ட பணத்தை கொடுக்க மறுத்துவிட்டேன்.

5. அவர்கள் அவ்வாறு பணத்தை கேட்டு வந்த நிலையில் 4 வருடங்கள் ஓடி விட்டது. நானும் என்னுடைய மனைவியும் அசல் தொகையை செலுத்திவிட்டோம் என்றும் வட்டி தொகையை என்னால் செலுத்த இயலாது என்று கூறி எங்கள் வீட்டிற்கு வரவேண்டாம் என்று கூறிவிட்டோம். மேற்படி சம்பவமானது என்னுடைய வீட்டில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமரா பதிவில் பதிவாகியுள்ளது.

6. 3 மாதங்கள் கழித்து எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்று வந்தது. அவ்வறிப்பினை அனுப்பிய பொன்னமாளை யார் என்று எனக்கு தெரியாது. அதனால் நான் சித்தம்பளத்திற்கு சென்று அவ்வூரின் கவுன்சிலரிடம் பொன்னம்மாள் குறித்து விசாரித்தபோது அவர் வாக்காளர் அடையாள அட்டையை பார்த்து விட்டு பொன்னம்மாள் ஈஸ்வரமூர்த்தியின் தாயார் என்று கூறினார்.

7. அவ்வாறு விசாரித்த பின்னர் தான் பொன்னம்மாள், அவரின் கணவர், அவர்களுடைய மகன் ஈஸ்வரமூர்த்தி, ஈஸ்வரமூர்த்தியின் மனைவி மற்றும் மகன் பிரதீப் ஆகியோர் பல்லடம் சிட் பண்டின் பங்குதார்களாக இருந்த விபரம் எனக்கு தெரியவந்தது. இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் ஆவணங்களை பார்வையிட்ட பின்னர் தான் கடனுறுதி சீட்டானது பிரதீப்பால் எழுதப்பட்ட விபரம் எனக்கு தெரியவந்தது.

8. பல்லடம் சிட்பண்டில் ஒருவகைப்படி பெறப்படும் தவணை தொகைகளை அவர்கள் பராமரித்து வரும் பதிவேட்டில் எழுதி வைப்பார்கள். நிலுவை தொகை குறித்து வாய் மொழியாக தான் கூறுவார்கள். மேலும் மற்றொரு வகைப்படி சீட்டிற்காக அட்டை கொடுப்பார்கள், அப்பொழுது சீட்டு தொகைக்காக காசோலை தான் பெறுவார்கள், பணமாக பெறமாட்டார்கள். நான் சேர்ந்தது பணமாக செலுத்தும் சீட்டு வகையாகும்.

9. பொன்னமாளுக்கும் எனக்கும் வரவு செலவு எதுவும் கிடையாது. நான் பல்லடம் சிட் பண்டுடன் தான் வரவு செலவு வைத்திருந்தேன். ஊரில் விசாரித்தபொழுது பொன்னம்மாள் படுத்த படுக்கையாக இருப்பதால் அவர் எவ்வாறு பணம் கொடுத்தார்கள் என்று என்னிடம் கேட்டார்கள். காசோலையை நான் கொடுத்தாக இவ்வழக்கில் கூறப்படும் 13.12.2020 ம் (ஞாயிற்று கிழமை) தேதியானது கொரோனா காலம் என்பதால் முழு ஊரடங்கு அமலில் இருந்தது. அந்த தேதியில் நான் காசோலை கொடுத்ததாக கூறுவது பொய்யாகும். இவ்வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டு கொள்கிறேன். இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் பொன்னமாளை பங்குதாரர் பொறுப்பில் இருந்து விலக்கிவிட்டார்கள்.

**<u>குறுக்குவிசாரணை</u>**

குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பு வேண்டுகோளுகிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2023.06.02 15:59:50 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**